# ஜனவிநோதினி.

இல. 11.] நவம்பர்மீ 1875. [புஸ்த. VI.

## பக்கிங்ஹம் ட்யூக் மகாப்பிரபுவின் நல்வரவு.

சென்ற மேமீ த்துச் சஞ்சிகையில் பக்கிங்ஹம் டியூக் பிரபு இச் சென்னை ராஜதானிக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டாரென்று தெரிவித்தோமே. அந்த மஹாப்பிரபு நாளதுமீ 23உ செவ்வாய்க்கிழமை பின்மாலை சென்னைக் கடற்றுறை வந்துசேர்ந்தார். அவருடைய நல்வரவைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய அலங்காரங்கள் முதனாளே செய்யப்பட்டிருந்தன. அங்கிலேயப் போர்ச்சேவகர்கள் அணிவகுத்துநின்றனர். அப்போது துறைக்காவலரும், துரைத்தனத்துப் பிரதான காரியதரிசியும், ராஜாங்கத்து உத்தியோகஸ்தர் இருவரும் துறைத்தோணியேறி ஆவிக்கலத்திற்குச் சென்று அந்த மஹாப்பிரபுவை அழைத்துவரவிருக்கையில் மழையினால் கொஞ்சந்தாமதப்பட்டது. எட்டைமணிக்குக் கட்டுமரமேறி நமது கவர்னர்முதலியவர்கள் வாரதிவந்து சேர்ந்தார்கள். அப்போது பீரங்கி வெடிதீர்ந்தது. பின்பு டியூக் பிரபுவிற்கென்று சமைத்திருந்த வாரதி வண்டியில் ஏறி அவர் தமது உத்தியோகஸ்தருடன் வாரதியடியிற் சேரவும், துரைகள், துரைசாணிகள், ராணுவஉத்தியோகஸ்தர்கள், காவல்வீரர்கள், சுதேசப்பிரபுக்கள் சிலர் நூதனகவர்னரைப் பணிந்து உபசரித்து ஏற்றுக்கொள்ளும்படி தர்பார்கூடாரத்திற்கூடிநிற்க, டியூக்பிரபு யாவருக்கும் பிரதிவந்தனஞ்செய்து, ராயபுரத்தினின்றும் வந்த 13–வது கௌரவ மெய்க்காவற்பட்டாளத்தாரைக் கவனித்து, அவர்களை முறைமையாய்ப்பார்க்க நினைத்திருப்பதாகக் குறிப்பித்து முன்னும் பின்னும் உத்தியோகஸ்தர்களுடன் உலாவிப்பார்த்து, பிற்கு ரதமேறி சிரேஷ்ட லிகிதரோடும் காரியதரிசிகளோடும்

கோட்டைக்குள்ளிருக்கும் துரைத்தன சபாமண்டபத்திற்குச் சென்றார். துரைத்தனமண்டபம் சேர்ந்தவுடன் மெய்க்காவல்வீரர் முதலிய ராணுவவகுப்பார் படைக்கலமேந்தி கீதவாத்தியத்தோடு முறைமையாயுபசரிக்க, சேனாபதிமுதலிய உத்தியோகஸ்தர்கள் வணக்கமாய் ஏற்று மந்திராலோசனைச்சபைக்கு நடத்திப்போனார்கள். உடனே ஆக்டிங் கவர்னர் போய்ச்சேர்ந்தார். அவருக்கும் ராணுவஉபசாரணைகள் நடந்தன. பிறகு பக்கிங்ஹம் மஹாப்பிரபு சென்னைக்கவர்னராக அக்கிராசனத்தில் வீற்றிருக்க, பிரதான காரியதரிசி எழுந்து இந்த மஹாப்பிரபுவுக்கு மகாராணியவர்கள் கொடுத்த அதிகாரபத்திரம் வாசித்தார். அதாவது:

(ஒப்பம்) விக்டோரியா.

டியூக் ஆவ் அண்டு சாண்டாஸ் என்றும் ஆரல்டெம்பில், என்னும் பட்டமும், வைகவுண்டு அண்டு பார்ன் காப்ஹம் என்றும் பட்டமும், ஆரல் நியூஜண்டு லார்ட்டு கின்லாஸ் என்னும் பட்டமும் பெற்றவராயும், நம்முடைய கனம்பொருந்திய சொந்த ஆலோசனைச் சபையில் ஒருவராயும் இருக்கிற மகா கனம்பொருந்திய ரிச்சர்ட்டு பிளாண்டாஜினெட்டு காம்பெல் டெம்பில் நியூஜெண்டு பிரட்ஜஸ் சார்லஸ் க்ரென்வில் அவர்கள்:

கடவுளின் அருளினாலே யூனைடெட் கிங்கிடம் ஆவ் கிரேட் பிரிடன் அண்டு ஐயர்லண்டுக்கு இராணியாயும், மதோத்தாரகர் என்னும் பட்டம்பெற்ற விக்டோரியா அவர்கள் நம்முடைய நம்பிக்கைக்கும் பூர்ண விசுவாசத்துக்கும் பாத்திராயும் பந்துவாயும் மந்திரியாயுமுள்ள டியூக் ஆவ் பக்கிங்ஹம் அண்டு சாண்டாஸ் என்னும் பட்டம்பெற்ற ரிச்சர்ட்டு பிளாண்டாஜினெட்டு காம்பெல் டெம்பில் நியூஜெண்டு பிரிட்ஜஸ் சார்லஸ் க்ரென்வில் அவர்களுக்கு நல்வாழ்த்து.

இந்தியாதேசத்து கவர்னர்ஜனரல் உத்தியோகமும், இந்தியா தேசத்து கவர்னரவர்களுடைய ஆலோசனைச்சபையில் மந்திரிகளாக சாதாரணமாயிருக்கவேண்டியவர்களில் நாலாவதாயிருக்கும் உத்தியோகமும், இந்தியாவிலுள்ள பிரஸிடென்ஸிகளுடைய கவர்னர் உத்தியோகமும் நம்மாலேயே கொடுக்கப்படவேண்டியதென்றும், உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட்டவர்களுக்கு நாமே நம்முடைய அரசாட்சிக்குரிய முத்திரையுடன் அதிகாரபத்திரம்

கொடுக்கவேண்டியதென்றும், நம்முடைய அரசாட்சியின் இருபத்தொன்று இருபத்திரண்டாம் வருஷங்களில் "இந்தியாதேசத்தை முன்னினும் செம்மையாய் ஆளவேண்டியதற்கான சட்டம்" என்னும் பெயருடன் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறபடியினாலே இப்போது உமக்குத் தெரிவிக்கிறதென்னவென்றால், பக்கிங்ஹம் சாண்டாஸ் என்னும் பட்டங்களுக்கு டியூக் என்னும் பட்டம்பெற்ற நீர் யஜமானவிசுவாஸத்திலும் முன்யோசனையிலும் நியாயாலோசனையிலும் எல்லாகாரியத்தையும் ஆய்ந்தோய்ந்துபார்த்துத் தொடங்குவதிலும் சிறந்தவரென்று உம்மிடத்தில் நாம் விசேஷ நம்பிக்கைவைத்து மேற்கண்ட பக்கிங்ஹம் சாண்டாஸ் என்னும் இடங்களுக்கு டியூக் என்னும் பட்டம்பெற்ற உம்மை ஈஸ்திந்தியாவில் மதராஸ் என்னும் சென்னைமாநகரத்தை ராஜதானியாகவுடைய போர்ட்டுஸெண்டு ஜார்ஜ் என்னும் பிரஸிடென்ஸிக்கும், மேற்படி பிரஸிடென்ஸியில் நடக்கவேண்டிய நம்முடைய ராஜகாரியங்களை நடத்துவதற்காகவும், அதுதவிர மேற்படி மதராஸ் பிரஸிடென்ஸியின் துரைத்தனத்தாரின் கையின்கீழ் இப்போதிருக்கிற மற்றெல்லாவிடங்களிலும், அந்தத் துரைத்தனத்தாரால் இப்போது நடத்தப்பட்டுவருகிற மற்றெல்லாக்காரியங்களையும் நடத்துவதற்காகவும், மேற்படி துரைத்தனத்துக்கு உட்பட்டனவாயும், மேலும் இப்போதே அந்த பிரஸிடென்ஸியின் கையின்கீழிருப்பனவாயும், இனிமேல் அப்போதைக்கப்போது அதன் கையின்கீழ் வருவனவுமாகிய கோட்டைகள், துர்க்கங்கள், வர்த்தகசாலைகள், புதியனவாய்க் கட்டப்பட்டுக் குடியேறயிருக்கிற ஊர்கள், நிலங்கள், சிறிய அரசாட்சிகள் நாடுகள், தாக்குகள், மாகாணங்கள் இவைகளில் ஒன்று தப்பாமல் எல்லாவற்றிற்கும் கவர்னர் என்னும் அதிகாரியாகயிருக்கும்படி ஏற்பாடுசெய்து உமக்கு இந்தப் பத்திரிகையால் அவ்வதிகாரம் கொடுத்திருக்கிறோம். இறந்துபோன நான்காவது உல்லியம் என்னும் பெயர்பெற்ற சக்கரவர்த்தியினுடைய அரசாட்சியின் மூன்றாவது நான்காவது வருஷங்களில் சபைகூடிய பார்லிமெண்டாரால் ஏற்படுத்தப்பட்டு, "ஈஸ்திந்தியா கம்பெனியாரோடு ஒரு ஏற்பாட்டை முடிவுசெய்துகொள்வதற்காகவும், 1854-ஞு ஏப்பிரில்மீ 30உவரையில் அச்சக்கரவர்த்தியினுடைய இந்தியாவைச்சேர்ந்த அரசாட்சிகளை முன்னினும் செம்மையாய் ஆள்விப்பதற்காகவுமான ஆக்ட்டு" என்று பெயர்பெற்ற ஆக்ட்டினாலாவது, அதை அனு

சரித்தாவது, அதை ஆதாரமாகக்கொண்டாவது, இதுவல்லாமல் இப்போது அமுலிலிருந்து மற்ற எந்த ஆக்ட்டை அனுசரித்தாவது மதராஸ் பிரஸிடென்ஸியில் துரைத்தனம் செலுத்துபவர்க்குத் தரப்பட்டாவது ஒப்புவிக்கப்பட்டாவதுயிருக்கிற அதிகாரங்கள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் நீர் செலுத்திக்கொண்டுவரவேண்டியது. நீர் இந்தியாதேசத்தில் போய்ச் சேர்ந்தஉடனே அந்த உத்தியோகத்தை நீர் பெற்று வகித்துக்கொண்டு அனுபவித்துக்கொண்டுவரவேண்டியது. எதுவரையில் நீர் அந்த உத்தியோகத்திலிருக்கவேண்டுமென்று நமக்குத் தோன்றி நாம் இஷ்டப்படுகிறோமோ அதுவரையில் நீர் அதிலிருக்கவேண்டியது. அப்படிச் செய்வதில் மேற்படி இறந்துபோன சக்கரவர்த்தியின் காலத்திலுண்டான பார்லிமெண்டாருடைய ஆக்ட்டு நாலாவது இப்போது அமுலிலிருக்கிற வேறே யாதொரு பார்லிமெண்டு ஆக்ட்டினலாவது ஆக்ட்டுகளினலாவது விதிக்கப்பட்டிருக்கிறபடி ஆலோசனைச் சபையிலுள்ள இந்தியா கவர்னர்ஜனரலவர்களுக்கு மேல்விசாரணைவிஷயத்திலும் தாழ்ந்தவர் செய்யும் காரியங்கள் முறைபிறழாமல் காத்து நடத்துகிறவிஷயத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்துக்கு நீர் கீழ்ப்பட்டிருக்கவேண்டியது. மேற்படி பக்கிங்ஹம் சாண்டாஸ் என்னும் இடங்களுக்கு டியூக் என்னும் பட்டம்பெற்ற உமக்கு மேற்படி பிரஸிடென்ஸியின் கவர்னர் உத்தியோகத்தை அனுசரித்தாவது ஆலோசனைச்சபையிலுள்ள கவர்னர் ஹோதாவை அனுசரித்தாவது நம்முடைய செக்கிரிடேரி ஆப் ஸ்டேட்ஸ் என்னும் உத்தியோகஸ்தர்களுக்குள் தலைமையானவர்களில் ஒருவருடைய கையெழுத்துடன் அப்போதைக்கப்போது அனுப்பப்பட்டிருக்கிற நிபந்தனைகளுக்கும் உத்தரவுகளுக்கும் நீர் உட்பட்டு நடக்கவேண்டியது. நமக்குக் கீழ்உள்ள பற்பல வகுப்பு உத்தியோகஸ்தர்களும் மேற்படி பிரஸிடென்ஸியின் எல்லைக்குட்பட்ட இராணுவர்களும் நம்முடைய போர்ட்டு செண்டுஜார்ஜிலும், மதராஸ் பட்டணத்திலும் உள்ள நம்முடைய குடிகள் பிரஜைகள் இவர்கள் எல்லாரும் பக்கிங்ஹம் சாண்டாஸ் என்னும் பட்டணங்களுக்கு டியூக் என்னும் பட்டம்பெற்ற உம்மை மேற்படி பிரஸிடென்ஸிக்கு கவர்னராக ஒப்புக்கொண்டு அதை அனுசரித்துச் சட்டத்தில் விதித்தபடி உள்ளடங்கி நடந்துகொள்ளும்படியாகக் கோரி இதனல் அவர்களுக்குக் கட்டளையிடுகிறோம்.

ஸ்திரமாய் நிற்கும் பொருள்கள்மாத்திரமல்லாமல் சீக்கிரத்தில் பழுதாகப் போகக்கூடிய மேற்குறித்த கறிகாய்முதலிய வஸ்துக்களும் லண்டன்பட்டணத்தில் எப்படியோ அப்படியேதான் அதன் சுற்றுப்பக்கங்களிலும் விற்கின்றன. இதுமாத்திரமோ! அந்தப்பொருள்கள் உற்பத்தியாகும் இடங்களில் எப்போதாவது அவைகள் அகப்படாதகாலத்திலும் நஷ்டமாய் விற்கும்காலத்திலும் லண்டனில் அவைகளைச் சரசமான விலைக்கு வாங்கலாம்.

இப்போது நாம் பேசுகிற தெருவியாபாரிகள் தங்கள் வேலையில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாய், தந்திரமும் புத்திநுட்பமுமுள்ளவர்கள். அவர்களுண்டு, அவர்களுடைய தொழிலுண்டு; மற்ற விஷயங்களைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுந்தெரியாது. வர்த்தகநாணயத்திலோ மற்ற வியாபாரிகள் எல்லாரையும்விடக் குறைந்தவர்கள்; ஆகிலும் புத்திசாலிகளாயிருக்கிற சிலர் உழைப்பினாலும் சாமர்த்தியத்தினாலும் பாரி .வியாபாரங்களில் இறங்கி அந்தஸ்தில் உயர்ந்து கண்ணியமும் நாணயமும் அடைந்து பிரசித்திபெறுகிறார்கள்.

லண்டன்பட்டணத்தில் அங்கங்கே தெருக்களில் சில்லறைக்கடைகள் வைத்துக்கொண்டு நாளை ஓட்டுகிறவர்கள் அநேகர். உயிரைக் காப்பாற்றுவதற்காக இவர்கள் படுகிற கஷ்டமும் துன்பமும் சொல்லிமுடியா; கைக்கு எட்டினவுடனே வாயில்போட்டுக்கொண்டு பரிதாபமான பிழைப்புப் பிழைக்கிறார்கள். ஒருநாள் மப்பும் மந்தாரமுமாயிருந்தால் அன்றைக்குப் பட்டினியாகத்தானிருக்கவேண்டும். வாயிருந்தால் பிள்ளை பிழைக்கிறது என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறாப்போல, இவர்கள் பிழைக்கிறது வாயினாலேதான் என்று சொல்லவேண்டும்; எப்படியெனில், தங்களுடைய சாமான்களைப் பார்வைக்கு அலங்காரமாய்ப் பரப்பிக்கொண்டு இனிப்பான சாதுரியப் பேச்சுகளினால் தெருவில் போகிறவர்களைத் தந்திரமாக இழுத்துத் தங்கள் பொருள்களிடத்தில் அவர்களுக்கு ஒரு நோக்கத்தை உண்டுபண்ணி ஒன்றுக்கு எட்டுவிலைசொல்லி அவர்களை எம்மட்டும் ஏமாத்தலாமோ அம்மட்டும் ஏமாத்துமுயன்று அத்தன்மையான மோசவியாபாரத்தினால் வரும் அற்பலாபத்தையடைந்து காலக்ஷேபம்பண்ணுகிறார்கள். ஒரு பெண்பிள்ளை இந்தமாதிரியான தொழிலில் பிரவர்த்தித்து எப்படியாகிறதென்று சிலகாலம்வரை பார்த்திருந்தாள். அவள் சாமர்த்தியமுள்ளவளுமல்ல, பொய்புளுகு சொல்லுகிறவளுமல்ல; ஆதலால் வியாபாரம் கொஞ்சமும் கைகூடிவரவில்லை; வெகுநஷ்டம் வந்துவிடுமென்று கண்டு சீ என்று அந்தத் தொழிலிலிருந்து நீங்கிவிட்டாள்.

லண்டன் நகரத்துத் தெருக்களில் புஷ்பவியாபாரம்பண்ணுகிறவர்கள் அநேகர்: மழை வெயில் காற்று இடி ஒன்றும் அவர்களுக்கு லட்சியமில்லை; வருஷம் முந்நூற்றறுபதுநாளும் அவர்களுடைய குரல் ஜனங்கள் நடமாடும் முக்கியமானவிடங்களிலெல்லாம் கேட்டுக்கொண்டேயிருக்கும். சிலர் குறிப்பான சில இடங்களுக்குமாத்திரம் போகிறதென்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; மற்றவர்களோ விற்பனை எங்கெங்கே அதிகமாயிருக்குமென்று தோன்றுகிறதோ அங்கங்கே போய்க்கொண்டிருப்பார்கள். இந்த அற்பவியாபாரத்தில் எவ்வளவு விற்பனையாகப்போகிறது, என்ன லாபங் கிடைக்கப்போகிறது என்று நாம் நினைக்கலாம்; இந்த வியாபாரம்பண்ணுகிற ஒருவனுக்கு வருஷத்தில் லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் விற்பனையாகின்றதாம்.

புஷ்பவியாபாரம்பண்ணுகிறவர்கள் அநேகமாய்ப் பெண்பிள்ளைகள்; புஷ்பங்களை ஒழுங்காயும் அலங்காரமாயும் வைத்துக்கொண்டு, சுத்தமாயும் லட்சணமாயும் பார்வைக்கு அழகாயும் யார் இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் விற்பனை அதிகம். புஷ்பசிங்காரங்களில் ஜனங்கள் செலவழிக்கிற பணம் மட்டுமிதமல்ல. அவரவர்கள் சூடிக்கொள்ளுகிற புஷ்பங்கள் அவரவர்களுடைய அந்தஸ்தைக் காட்டும். முக்கியமாய்ச் சேவகம் செய்யாமல் யதேச்சையாய் வாழும் பணக்காரர்கள் இந்தவிஷயத்தில் விஸ்தாரம் பணம் செலவழிக்கிறார்கள். ஒருவன் வருஷம் ஒன்றுக்கு நானூறு ரூபாய்க்குப் புஷ்பம் வாங்குகிறதென்றால் அதிசயமன்றோ! லண்டன் பட்டணத்தாருக்கே புஷ்பத்தினிடத்தில் ஓராசையுண்டு. அதன் சுற்றுப்பக்கங்களில் புஷ்பத்தோட்டங்கள் மிகவும் அதிகம்.

அநேக ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் மழைகாலத்தில் சுட்ட உருளைக்கிழங்கை தெருத்தெருவாய் விற்றுக்கொண்டிருப்பார்கள். உண்ணச்சோறு கிரமமாய் அகப்படாத ஏழைகள் அந்த உருளைக்கிழங்கை வாங்கிக் கொஞ்சம் உப்பும் வெண்ணெயும் போட்டுக்கொண்டு தின்பார்கள். தீக்குச்சிப்பெட்டிகள் உண்டானபிறகு லண்டனிலும் நாட்டுப்புறங்களிலும் அவைகளை விற்று ஜீவனம்பண்ணுபவர்கள் அநேக ஆயிரம்பேர். இந்தத்தேசத்திலும் இந்த வியாபாரம் விஸ்தாரமாய் நடக்கிறது என்று நமக்குத் தெரியுமல்லவா? சிறுபிள்ளைகள் வர்த்தகம் ஆரம்பம்பண்ணும்போது தீக்குச்சிவியாபாரத்தைத்தான் முதல் முதல் தொடங்குகிறது. லண்டன்பட்டணத்தில் முக்கியமான ஸ்தலங்களில் என்னென்னவோ விதம்விதமான வஸ்துக்களை வைத்துக்கொண்டு விற்பவர்கள் கணக்குவழக்கில்லை. அந்த சாமான்களில் ஒன்றாவது ஒரு அணாவுக்கு இரண்டு அணாவுக்கு மேற்பட்டிராது. பத்திரிகைகளுக்கு முத்திரைத் தீர்வையும் விளம்பரத்தீர்வையும் எடுபட்டுப்போனபிறகு தெருவியாபாரிகளுள் புதிதாக ஒரு வகுப்பார் தோன்றினார்கள். சிறுபிள்ளைகள் பத்திரிகைகளை லண்டனிலும் மற்ற முக்கியமான பட்டணங்களிலும் எடுத்துக்கொண்டு திரிவதைப்பார்க்கலாம். அவர்கள் மிகவும் தந்திரமுள்ளவர்கள்; பழைய பத்திரிகைகளைப் புதியவைகளாகக் காண்பிக்க அவர்களுக்குத் தெரியும்.

லண்டன்பட்டணத்துத் தெருவியாபாரிகள் நீதியற்ற துஷ்டர்களென்று அநேகர் நினைக்கிறார்கள்; அது அவ்வளவு சரியான அபிப்பிராயமென்று காணவில்லை. அவர்கள் செய்கிற வேலை அந்த நகரத்தில் ஏறக்குறைய எல்லாருக்கும் மிகவும் உபயோகமானதென்று முன்னமே சொன்னோம். அவர்களுடைய தப்பிதங்களைக்குறித்துப் பேசுமுன்பே, வயிற்றைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்களென்று பார்க்கவேண்டாமா? அவர்களுள் அநேகர் அந்தத் தொழிலைக்கொண்டிருப்பது வேணுமென்றல்ல; அவர்களையுமறியாமல் விதிவசத்தால் அந்தக் கதி அவர்களுக்கு நேரிட்டிருக்கிறது. நாலுநாளைக்கு அடர்த்தியாய் மழைபெய்யுமாயின் அவர்கள் படும் துன்பமும் கஷ்டமும் தெய்வத்துக்குத்தான் தெரியும்.

# ஐசுவரியம் — பணம்.

ஐசுவரியமென்றும், செல்வமென்றும், சம்பத்து என்றும் பலவிதமாகச் சொல்லுகிறோமே, அதற்கு உண்மையான அர்த்தம் என்னவென்று பார்ப்போம். பணமும் நினைத்தபொழுது பணமாகச் செய்யக்கூடிய பொன் வெள்ளிமுதலிய உலோகங்களுமாத்திரந்தான் ஐசுவரியம்; மற்றொன்றும் ஐசுவரியமல்லவென்ற நம்பிக்கை சில வருஷங்களுக்குமுற்பட்டுக்கூட உண்டாயிருந்தது. பொன்னையும் வெள்ளியையும் கட்டிகட்டியாய் ஒரு தேசத்தில் சேர்த்துவிட்டால் அதற்குச் செல்வப்பெருக்கம் உண்டாமென்றும், அவைகள் ஒரு தேசத்திலிருந்து அப்புறப்படுமாயின் அந்தத் தேசம் ஏழ்மையாய்விடுமென்றும், பொன்வெள்ளி சுரங்கங்கள் இல்லாத தேசத்துக்கு ஐசுவரியம் உண்டாக்குவதற்குப் பிறதேசங்களோடு வர்த்தகம்செய்து அவைகளைச் சம்பாதிப்பதேதவிர வேறுமார்க்கம் இல்லையென்றும் எல்லாத் தேசத்தாரும் எண்ணியிருந்தார்கள். இவ்விதமாய், உலகத்தில் வர்த்தகம் என்னுந்தொழில், பொன்வெள்ளி உனக்கு அதிகமாகிறதோ எனக்கு அதிகமாகிறதோ பார்ப்போமென்று போட்டிபோட்டுக்கொண்டு செய்த தொழிலாகவே இருந்தது. இப்படிப்பட்ட பட்சத்தில், ஒரு தேசத்துக்கு லாபம் கிடைக்குமானால், மற்றத் தேசங்களுக்கு நஷ்டமாவது நேரிடவேண்டும்; லாபங்கிடைக்காமலாவதிருக்கவேண்டும். இத்தன்மையான எண்ணங்கள் சாதாரணமாய் எல்லாருக்கும் உண்டாயிருந்து, தேசங்களின் சீர்மைக்குறைவுக்கு ஏதுவாயிருந்தன. ஆகிலும் அவ்வெண்ணங்களெல்லாம் சுத்தப்பிசகானவையென்று இந்தக்காலத்தில் தெளிவாய் ஏற்பட்டிருக்கிறது.

ஜலம் காற்றுமுதலானவைபோல யாவருக்கும் இலவசமாய் அகப்படக்கூடிய பொருள்களைத்தவிர, மனிதனுக்கு வேண்டிய மற்றெல்லாப் பொருள்களும் ஐசுவரியத்திற்சேர்ந்தவையே. உபயோகத்திற்கான பொருள்களைச் சேகரித்துவைப்பது அல்லது அவைகளைத் தேவையானபோது வாங்குவதற்கான கருவிகளை வைத்திருப்பதே ஐசுவரியமுடைத்தாயிருப்பதென்பது. நமக்குவேண்டிய பொருள்கள் பிறரிடத்திலிருந்து வரவேண்டுமானால் அவைகளுக்குப் பதிலாக ஏதேது கைம்மாறாகக் கொள்ளப்படுமோ, அதெல்லாம்தான் ஐசுவரியம். ஒரு வஸ்து எவ்வளவு உபயோகமானாலுஞ்சரி, எவ்வளவு அவசியமானாலுஞ்சரி, அது பிரதிப்பொருள்களைக் கொண்டுவரமாட்டாதாயின் ஐசுவரியமல்ல. பணந்தவிர வேறொன்றுக்கும் பிரதிப்பொருள் கிடைக்கக்கூடாதென்பதில்லையே; ஆகையால் செல்வம் என்பது பணமாத்திரமல்ல. ஆயினும் பணம் முதன்மையான செல்வமென்று எண்ணப்படுகிறதல்லவா? அதற்குத்தகுந்த நியாயமுண்டு: ஏனெனில் அது ஒரு விசேஷகாரியத்துக்கு உதவுகிறது. அதென்னகாரியம்? பணம் என் விரும்பத்தக்கினது?

வஸ்துக்களினுடைய பெறுமானங்கள் வெவ்வேறாக இருக்கின்றனவாதலால் அவைகளுக்கெல்லாம் பொதுவான ஒரு அளவு இல்லாவிடின் அவைகளுள் ஒவ்வொன்றுக்கும் மற்றவைகளுக்குமுள்ள சம்பந்தத்தை

அறிவது மிகவும் வருத்தமாயிருக்குமே. இதற்கு ஒரு திர்ஷ்டாந்தம் பாருங்கள்: குடைதைத்து ஜீவனம்பண்ணுகிற ஒருவனுக்கு அரிசிவேண்டுமானால் ஒரு குடைக்கு எவ்வளவு அரிசியென்று தெரிந்துகொள்ளுகிறது? அவனுக்குக் குதிரைவேண்டுமானால் ஒரு குதிரைக்கு எத்தனை குடைகள் கொடுக்கிறது? இப்படியே ஒவ்வொரு பொருள்வேண்டும்போதும் வெவ்வேறு கணக்குப் பார்க்கவேண்டி இருக்குமன்றோ? பொருள்களினுடைய தாரதம்மிய மதிப்பும் நன்றாய்த் தெரியமாட்டாது. அப்படியில்லாமல் இப்போதிருக்கிறதுபோல ஒவ்வொரு பொருளுக்கும் நாணயவிலை ஏற்பட்டுப் போனால் யாதொரு வருத்தமுமிராது. எப்படியெனில், ஒரு குடையின் விலை 1 ரூபாய்; 1 ரூபாய்க்குப் பத்துபடி அரிசியென்று இப்படியே பொருள்களுக்குள்ள சம்பந்தங்களைப் பணத்தின்மூலமாய் எளிதில் தெரிந்துகொள்ளலாம். முகத்தலளவைகள் ஆழாக்கு படி மரக்கால் என்றும், நீட்டலளவைகள் அங்குலம் அடி கஜம் என்றும் எப்படி தெளிவாய்த் தெரிகின்றனவோ, அப்படியே வஸ்துக்களின் பெறுமானமும் தம்பிடி அணா ரூபா என்று யாவருக்கும் தெரியும். இந்தப் பொதுவான அளவையல்லாமல் அவைகளினுடைய ஏற்றத்துக்கும் தாழ்ச்சிக்கும் தகுந்தபடி தாரதம்மியம் பார்த்துப் பிரிப்பதற்கு வேறுவகை இல்லை.

பணத்தினால் உண்டாகும் பலன் இதுமாத்திரமல்ல, இதைவிட மேலானதோர் பலனுமுண்டு. குடைக்காரனுக்கு அரிசிவேண்டுமேயானால், குடையைவேண்டிநிற்கிறவன் யாராவதுண்டா, அவனிடத்தில் அரிசி உண்டாவென்று தேடி அலையவேண்டுமேதவிர, நினைத்தபோது குடை போயிற்றும் அரிசிவந்ததாம் என்பதில்லை. அன்றியும், ஒரு குடைக்கு எவ்வளவு அரிசி கிடைக்குமோ அவ்வளவு அரிசி அவனுக்குத் தேவையில்லாவிட்டால் அவன் என்னசெய்வான்? குடையை ஒடித்துக் கொடுக்கப்படாதே. குடையானது எல்லாரும் எந்தக்காலத்திலும் விரும்பத்தக்கினதன்றாதலாலும் பகுக்கக்கூடியதல்லவாகையாலும் இந்தக் கஷ்டமுண்டாகிறது. ஆகையால் எந்த வஸ்துவானது பகுக்கக்கூடியதாயும் எல்லாராலும் விரும்பப்பட்டதாயும் மற்றச் சாமான்களுக்குக் கைமாறாகக் கொள்ளப்பட யோக்கியமாகவும் இருக்கிறதோ, அதை எப்பாடுபட்டாவது சம்பாதித்துச் சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டுமென்று எல்லாருக்கும் இஷ்டமிருக்குமல்லவா? ஆகாரத்துக்கு உபயோகப்படும் வஸ்துக்கள் இந்தத் தன்மைகளமைந்தவைகளாயிற்றே என்றாலோ, பஞ்சம் சீக்கிரத்தில் வருமென்று தெரிந்தாலல்லாமல் அவைகளை அதிகமாய்ச் சேர்த்துவைக்க யாருக்கு இஷ்டமிருக்கும்? அப்படி சேர்த்துவைத்தாலும் நெடுநாளைக்கு கெட்டுப்போகாமல் நிற்கமாட்டா. ஆகையாலேதான் முன்சொன்ன மூன்றுகுணங்களோடுகூட எத்தனைநாளானாலும் பழுதாகாத குணமுள்ள வஸ்து என்னவிருக்கிறதென்று பார்க்கவேண்டியிருக்கிறது.

அநேகமாயிரம் வருஷங்களுக்குமுன்தொடங்கி ஏறக்குறைய எல்லா ஜாதியார்களும் உலோகங்கள் (முக்கியமாய் பொன்னும் வெள்ளியும்) மேற்குறித்த காரியத்திற்கு ஏற்றவையென்று கொண்டிருக்கிறார்கள். சோறும் துணியுமுண்டானால் உடம்பை அலங்கரித்துக்கொள்ள ஆபரணம் வேண்டுமென்கிற ஆசை உண்டாகி, விலையுயர்ந்ததும் அலங்காரத்துக்கு அடுத்ததுமான பொன்வெள்ளியைத் திரட்டிவைக்க ஒவ்வொருவனும் ஆவலுடன் முயல்கிறான். இந்த உலோகங்கள் எப்படிப்பட்டவையென்

றால் அழிவில்லாதவைகள்; ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எளிதில் கொண்டுபோகத்தகுந்தவைகள்; பார்வைக்குக் கொஞ்சமாயினும் விலையில் மேன்மையானவைகள்; பிறர்கண்ணுக்குத் தெரியாமல் ஒளித்துவைக்கத் தகுந்தவைகள்; வெகு நுட்பமாயும் பகுக்கக்கூடியவைகள்; சுத்தமாயிருந்தால் மாறாத தன்மையுள்ளவைகளுமாம்.

ஆபிரிக்காவின் மேற்குக்கரையில் கிளிஞ்சில்களும், அபிசீனியாவில் இந்துப்புக்கட்டிகளும், சில இடங்களில் இரும்பும், சில இடங்களில் பித்தளையும் சில தேசங்களில் தோல்களும் சில தேசங்களில் ஆடுமாடுகளும் பணமாக உபயோகப்பட்டுவந்திருந்தாலும், பொன் வெள்ளி அகப்படக்கூடிய எல்லாத்தேசங்களிலும் சாதாரணமாய் அவைகளே வெகுகாலந்தொடங்கிப் பணமாகக்கொள்ளப்பட்டு வருகின்றன. பொன்வெள்ளிகளுக்கு இன்னொரு மேலான குணமுண்டு. உலகத்தில் அநேகமாய் எல்லா வஸ்துக்களும் நாளாவர்த்தியில் அதிகப்படுதலினாலும் குறைந்துபோதலினாலும் மதிப்பில் முறையே குறைந்துகொண்டும் உயர்ந்துகொண்டுமிருக்கின்றன. பொன்வெள்ளியோ அப்படியல்ல; அமெரிக்காவில் பொன்வெள்ளி சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் மாத்திரந்தான் அவைகளினுடைய மதிப்பில் ஒரு விசேஷமாறுதலுண்டாயிற்றேயல்லாமல், அதற்குமுன்னே அப்படிப்பட்ட மாறுதலுக்கு உட்பட்டவைகளாகக்காணோம். இனிவருங்காலத்திலும் எங்கேயாவது சுரங்கங்களிலிருந்து விஸ்தாரமாக அகப்பட்டாலென்னவோ தெரியாது; மற்றப்படி அவைகளின் மதிப்புக்கு அடிக்கடி மாறுதலுண்டாகுமென்று நம்புவதற்குக் கொஞ்சமும் இடமில்லை. ஒருவர்க்கொருவர் முன்வாங்கிப் பின்கொடுப்பதற்கும் முன்கொடுத்துப் பின்வாங்குவதற்கும் பொன்வெள்ளியைத்தவிர வேறே தகுந்தபொருள் இல்லை. இந்தவருஷம் பத்துகலம் நெல்கொடுத்து வருகிறவருஷம் அதே பத்துகல நெல்வாங்கிக்கொள்வதற்கு என்னவென்றாலோ, இந்தவருஷம் இருபதுரூபாய் விலையுள்ள நெல் வருகிறவருஷம் செம்மையாய் விளைந்தால் பத்துரூபாயிருந்தாலுமிருக்கும்; மழையில்லாமல் க்ஷாமமாயிருந்தால் நாற்பதுரூபாய்க்கு மேற்போனாலும் போகும். இப்படியே எல்லாப்பொருள்களுக்கும் நயமென்றும் நஷ்டமென்றும் இரண்டு இருக்க, பொன்வெள்ளிகளுக்கு அவ்விரண்டும் இல்லையென்றே சொல்லலாம்.

பொருள்களை வாங்குவதற்கும் விற்கிறதற்கும் பொன்வெள்ளிகள் கைம்மாறாக ஏற்பட்டுப்போனபிறகு, அவைகளை நாணயங்களாக அடிக்கவேண்டுமென்று தோன்றுவது இயல்பன்றோ? அதாவது, அப்போதைக்கப்போது பொன்னையும் வெள்ளியையும் நிறுத்து நிறுத்துச் சிறுசிறுபாகங்களாக வெட்டும்படி நேரிடுவதனாலுண்டாகும் அவஸ்தையினிமித்தம் எத்தனைச் சிறுபாகங்கள் அவசியமாக இருக்கவேண்டுமென்று காண்கிறதோ, அதை நிச்சயித்து ஒவ்வொன்றுக்கும் இவ்வளவு இவ்வளவு நிறையென்று தீர்மானித்து அவைகளுக்கு ஒரு வடிவம் கொடுப்பதுதான். இந்தக்காரியத்தை ஒவ்வொருவனும் தனித்தனியாக இஷ்டப்படி செய்வது கூடாதென்று தடுத்து எல்லாருக்கும் பொதுவில் அரசாட்சி நடாத்திவருகிற அதிகாரிகளே மேற்போட்டுக்கொண்டார்கள்.

பணம் உபயோகத்தின்கீழ் வந்துவிட்டபிறகு, அவரவர்களுடைய ஆஸ்திகளும் சம்பாத்தியங்களும் செலவுகளும் பணத்தினால் அளவிடப்

பட்டுவருகின்றன. தத்தமக்குவேண்டிய பொருள்களைப் பணமிருந்தால் அடையலாமென்ற விஷயம் எல்லாருடைய மனதிலும் நன்றாய் ஸ்திரப்பட்டுப்போயிருக்கிறபடியால், மற்றப் பொருள்களினிடத்திலிருக்கிறதைவிட அதிகமான ஓராசையும் நோக்கமும் பணத்தினிடத்தில் உண்டாகிறது; இதுதான் ஐசுவரியம்; மற்றொன்றும் ஐசுவரியமல்லவென்று தோன்றுவதற்கும் இடமுண்டாகிறது. இதன்றியும், பணத்தை விசேஷமாகக் கையாளாமல் மிகவும் உபயோகமான பொருள்களைப் பயிராக்குவதில் நாட்டமுள்ள பாரிக்குடியானவர்களும் அவர்களைப்போன்ற மற்றத் தொழிலாளிகளும் தங்கள் பொருள்களை மதிக்கிறது என்னத்தினாலேயென்றால் அந்தப் பொருள்களால் அதிகப்பணம் கிடைக்குமென்ற எண்ணத்தினாலே அல்லாமல் வேறில்லை.


ஒரு பொருளை முதலில் பணமாக்கிப் பிறகு அந்தப்பணத்தைக்கொண்டு வேறுபொருளை வாங்குவதற்கும், அந்தப் பொருள்களையே நேராய் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளுவதற்கும் வித்தியாசமென்ன? முன்னது சுலபமான காரியம்; பின்னது வருத்தமானது. இதுதான் வித்தியாசம்; மற்றபடி வித்தியாசமில்லை. இதனால் பணத்தின் உபயோகம் ஜனங்களுக்குள் நடக்கும் பொருள்மாற்றல் முதலிய காரியங்களைச் சுலபப்படுத்துவதற்காகவேயென்று தெரிந்துகொள்ளலாம். உண்மையாய்ப்பார்க்கின், பணத்தைக்கொண்டா நாம் வஸ்துக்கள் வாங்குகிறோம்? இல்லை; அப்படியானால் சுரங்கம்வெட்டி எடுப்பவர்களுக்குமாத்திரம் வஸ்துக்கள் அகப்படுமேதவிர, மற்றப்பேருக்கு அகப்படாதே. எஜமானன் வேலைக்காரனிடத்தில் வேலை வாங்கிக்கொண்டு அவன் வயிற்றுக்குவேண்டிய பொருள்களைக் கொடுப்பதற்குப்பதிலாக அந்தப் பொருள்களை அடைவதற்கு சாதனமென்று கொள்ளப்பட்ட பணத்தைக் கொடுக்கிறான். புகைவண்டி ஏறுவதற்காக நாம் பணம்கொடுத்து வாங்குகிற சீட்டு உத்தேசித்த இடத்துக்கு நம்மைக் கொண்டுபோய் விடவேண்டுமென்பதற்கு எப்படி அடையாளமாயிருக்கிறதோ, அப்படியே வேலைக்காரனுக்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதற்காக கொடுக்கப்படுகிற அடையாளமன்றோ அவன் சம்பளமாக வாங்குகிற பணம்?

எப்படியாவது நிறைவேறக்கூடியதோர் காரியத்தைச் சுலபமாயும் சீக்கிரமாயும் செய்யப்பண்ணுகிறதுமாத்திரந்தான் பணத்தின் பிரயோஜனம். ஒருவன் தனக்கு வரவேண்டிய வரும்படிகளைப் பணமாய் வாங்கிக்கொண்டு, நினைத்தபோது தனக்கு வேண்டியபொருள்களாக அதை மாற்றிக்கொள்ளலாமென்பதொன்றொழிய, பணத்தினால் உண்டாகும் பிரயோஜனம் வேறில்லை. பணத்தைச் சும்மா கையில் வைத்துக்கொண்டிருந்தால் பசியாறுமா? பணம் வழங்குகிற தேசத்தில் சிரமமில்லாமல் எல்லாத் தொழில்களும் நடந்தேறிவரும்; பணம்வழங்காத தேசத்தில் அவ்வளவு எளிதாகக் காரியங்கள் நடந்துவரமாட்டா. பணத்தினால் சௌக்கியமுண்டென்றாலும் அதையே பிரதானமாக எண்ணிக்கொள்ளுவது மிகவும் பிசகென்பதற்குச் சந்தேகமில்லை. நம்முடைய வீட்டுக்குப்போகிறதற்கு நல்லபாதை ஒன்றிருந்து, அதனால் நமக்கு அதிக சௌக்கியம் உண்டாகிறதென்றாலும், அது வீட்டுக்குப்போகப் பாதையேயன்றி வீடாகுமோ?

## அன்னப்பாகிலிருந்து ஸாராம்சம் வேருய்ப்பிரிதலும் அது ரக்தமாதலும்.

நாம் உட்கொள்ளும் உணவு இரைப்பையிற்போய்ச் சேர்ந்து நன்ருய் மசிந்து அன்னப்பாகாய் மாறியபிறகு, அதிலுள்ள நிச்சார மான திப்பிகளையெல்லாம் வேருய்ப்பிரித்துத் தேஹத்திற்குப் புஷ்டி யைத்தருகிற பாகங்களையெல்லாம் ரக்தமாகும்படி பக்குவப்படுத்த வேண்டும்.

அன்னப்பாகு பக்குவமானவுடன் இரைப்பையின் கீழிருக்கிற வாயற்காப்பான் என்கிற சிறுதுவாரத்தின் வழியாய்க் குடலில் பிரவேசிக்கின்றது. நல்ல வயதான புருஷனுக்கு அந்தக் குடல் முப்பது அடிக்கு அதிகமாய் நீண்டிருக்கும்.




1. குடல்.
2. இரைப்பை.
3. ஈரல்.
4. கண்டநாளம்.
5. பித்தப்பை அல்லது பித்தர்சயம்.
6. கணையம்.

மேற்காட்டிய படத்திலிருப்பதுபோல அந்த நீண்ட குழாயா னது சுருட்டிக்கொண்டு இருக்கிறது. அது நமது தேகத்தில் மிக வும் சிறிதிடத்தில் தங்கியிருக்கின்றது.

அந்தக் குடலின் பக்கங்கள், கண்ட நாளத்தின் பக்கங்கள் அசைந்துகொண்டிருப்பதுபோலவே, எப்பொழுதும் புழுநெளிவது போல நெளிந்துகொண்டே இருக்கின்றன. அதனால் அந்த அன்னப்பாகானது கிரமமாய்க் குடல்முழுதும் பிரவேசிக்கின்றது. அதன்வழியாய் அன்னப்பாகு போகும்போது நடுவே அதனுடன் ஈரலினின்றும் உண்டாகின்ற பித்தநீரும், இரைப்பைக்கு அடுத்த கீழ்ப்புறத்திலிருக்கிற கணையத்தினின்று உண்டாகும் கணையநீரும் குடலின் ஓரங்களினின்றும் பொசிகிற குடல்நீரும் கலக்கின்றன. உமிழ்நீர், பித்தநீர், குக்கிநீர் இவைகளால் கரைக்கப்படாமல் மீறி வரும் போசனத்தைக் கரைத்துச் சமிக்கப்பண்ணக்கூடிய நீரே கணையநீராம்.

அந்தப் பித்தநீர்முதலிய மூன்றுநீரும், அன்னப்பாகிலுள்ள, உடம்பைப் போஷிக்கின்ற ஸாராம்சத்தை அதிசிறிதான துவாரங்களின் வழியாய்ப் போகும்படி ஓர்வகையான திரவமாய்ப் பிரித்தெடுக்கத்தக்க விசித்திர சக்தியுடையவைகளாய் இருக்கின்றன. பின்னும் உடனே ரக்தமாக மாறும்படி அவ்வளவு பக்குவமாய் அந்தத் திரவத்தை மாற்றுவிக்கின்றன. இப்படி அன்னப்பாகினின்றும் வேறாய்ப் பிரித்தெடுக்கப்பட்ட திரவபதார்த்தத்திற்கு அன்னஸாரமென்று பெயர்.

அந்த அன்னப்பாகு பக்குவமானவுடன் அதைக் கொண்டு போக, விசித்திரமான நாளம் அல்லது ரக்தநரம்புகள் குடல்முழுதும் இருக்கின்றன. அன்னப்பாகு முப்பது அடி நீளமுள்ள குடலில் அடிமுதல் நுனிவரையில் மெதுவாய்ப்போகையில் நடுவழியிலுள்ள சிறிய நாளங்களெல்லாம் ஓயாமல் அதிலுள்ள ஸாராம்ஸங்களையெல்லாம் எடுத்துப் பெரிய நரம்புகளில் கொண்டுசேர்க்கின்றன. அங்கே அந்த ரசம் ரக்தமாகமாறி இருதயஸ்தானத்திற்குச் சமீபத்திற்போய்ச் சேருகின்றன.

### பலவித உணவினாலும் ஒரேமாதிரி ரக்தமே உண்டாகிறது.

நாம் உட்கொள்ளுமுணவு தேகமெங்கும் பரவும்விதமும், பின்பு அது எவ்விதமாய் மாறுகின்றதோ அதுவும் இப்போது நமக்கு நன்றாய்த் தெரியவந்தது. நாம் எவ்வகையான ஆகாரமேற்றுக்கொண்டாலும் அதனின்றும் கீழ்ச்சொல்லியபடி மிகவும் மெதுவாயும் அழுத்தமாயுமிருக்கிற பால்போல வெளுப்பான அன்னப்பாகு உண்டாகின்றது. அது உடனே சிவந்த ரக்தமாகமாறித் தேகத்திலுள்ள ரக்தநரம்புகளிலெல்லாம் பிரவேசிக்கின்றது.

நல்லவயதான மனிதர்கள் புசிக்கிற அன்னம், ரொட்டி, பழம், பலகாரம்முதலிய பற்பல உணவுகளாலும் எவ்விதமான ரக்தமுண்டாகிறதோ, அவ்விதமான ரக்தமே பாலுண்ணும் பிள்ளைகளுக்கும் உண்டாகின்றது. அப்படியே சிலர் புசிக்கிற திமிங்கிலக்கொழுப்பு,

நாய்மாமிசம், இன்னும் பல காட்டுமிருகங்களின் மாமிசமுதலிய வைகளால் உண்டாகிற ரக்தமும், இந்துக்கள் புசிக்கிற அரிசி, கீரை, பழம்முதலியவைகளால் உண்டாகிற ரக்தம்போலவே இருக்கும். தனவான்கள் அதிகதிரவியங்கொடுத்து வாங்கிப் புசிக்கிற உயர்ந்த உணவும், வேறொன்றும் கதியில்லாத ஏழைகள் புசிக்கிற கூழ் கஞ்சி உருளைக்கிழங்குமுதலிய எளிய உணவுகளும் ஒரேமாதிரியான ரக்தத்தை உண்டாக்குமேயன்றி வேறில்லை.

## தசகுமாரசரிதம்.

### இரண்டாவது:

### அபஹாரவர்மாவின் கதை.

*உஜ்ஜயினீ நகரத்தில் குமாரர்கள் அனைவரும் கூட்டங்கூடியபிறகு அபஹாரவர்மா ராஜகுமாரனை நோக்கித் தன் கதையைச் சொல்லத்துவக்கினன்.*

ஓமகாராஜனே! நீ முன்னாள் எங்களனைவரையும் வஞ்சித்துப் பிராமணனுக்குத் துணைசெய்யப்போனபோது நம் தோழர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருபக்கந் தேடிக்கொண்டுபோகையில், நானும் ஒருமூலை தேடிக்கொண்டுவந்தேன். வருகையில், அங்கதேசத்தில் கங்கைக்கரையில் மரீசியென்கிற ஒரு மகாரிஷி பெருந்தவமியற்றி முக்காலமும் உணர்ந்திருக்கிறார் என்று ஜனங்கள் சொல்லக்கேட்டு, அவரால் உன் வரலாற்றை அறியலாமென்று அவ்விடஞ்சென்றேன். அந்த ஆச்சிரமத்தில் ஒரு மாங்கன்றினிழலில் உடலெல்லாம் உலர்ந்து ஒரு முனிவர் உட்காந்திருக்கக் கண்டு, அவர்செய்த அதிதிபூசையைக் கைக்கொண்டு அவரை நோக்கி: ஸ்வாமி மரீசிமாமுனிவர் எங்கே எழுந்தருளியிருக்கிறார்; அவர் தவப்பெருமை நமது புத்திக்கெட்டத் தக்கதன்றென வியம்பக்கேட்டிருக்கிறேன். அவரைக்கேட்டு தேசாந்தரகதனான என்தோழன் வரலாற்றை வினவலாமென்று வந்தேன் என்றேன்; உடனே அவர் பெருமூச்செறிந்து இயம்பலுற்றனர்.

சொல்லுகிறேன் கேள், இவ்வாச்சிரமத்தில் அத்திறமையுள்ள முனிவர் வதிந்ததுண்டு. இவ்வங்கதேசத்து வேசியர்களிற்சிறந்த காமமஞ்சரியென்கிற ஒருபெண் ஒருகால் இரண்டுகண்களிலும் நீர் தாரைதாரையாய் வழிய கேவிக்கேவிக் கதறிக்கொண்டே ஓடிவந்து தலைமயிரைத் தரையிலே பரப்பிக்கொண்டு அவர் தாள்களில் வீழ்ந்தாள். உடனே அவள்தாய்முதலியோ ரனைவரும் மாரடித்து அவளைத் தூக்கிக்கொண்டுவந்து அம்முனிவரைச் சரணமடைந்தனர். அதைக்கண்டு அம்முனிவர் மனமிரங்கி பிரியவசனமாய் அவர்களைத் தேற்றுவித்து, நீ சோகிப்பதற்குக் காரணம் யாதென்று அவ்

வேசிப்பெண்ணை வினவ: அவள், அவரிடத்தில் வெட்கமும் அச்சமுமுடையவள்போலவும் துக்கத்தால் வாய்திறக்கமாட்டாதவள்போலவும் நடித்து வாய் தழைதழைக்க ஓ ஸ்வாமி! இம்மையிலுண்டான இன்பத்திற்குரியாளாயினும் அடியாள், அதற்குப் பெரியோர்கள் இடங்கொடாமையால் அதைத் துறந்து அறுதைகளுக்கடைக்கலமான தங்கள் தாமரைத்தாள்களைச் சரணமடைந்தனள், காக்கவேண்டுமென்றாள். அதுகேட்டு அவள் தாய்வந்து அவரெதிரே கைகூப்பிநின்று ஓதேவனே! தன் ஜாதிக்குரிய தொழில்களைச் செய்யும்படி இவளை நான் தூண்டுவதே என்மேல் குற்றமென்கிறாளல்லவா? பெண்பிறந்ததுமுதல் தேஹத்தில் மேனியும் பலமுமுண்டாகிப் புத்தியுநாளுக்குநாள் நன்றாய் மலர்ந்துவரும்படி உயர்ந்த உணவுகளால் சரீரத்தைப் போஷிப்பதும், ஐந்துவயதுமுதல் தகப்பன்முகத்தையும் பாராதபடிக்குக் காவல்செய்வதும், கீதவாத்திய நாட்டியமுதலிய பற்பல சாஸ்திரங்களில் பயில்விப்பதும், ஸகலபாஷைகளிலும் பேசப்படிக்க நன்றாய்க் கற்பித்து நயமாயும் இனிப்பாயும் பேசுந்திறத்தையுண்டாக்குவதும், சதுரங்கம் சொக்கட்டான்முதலிய பல சூதாட்டங்களில் சித்திபெறச்செய்வதும், வயதுவந்தபின் சகல ஜநங்களையும் தன்வசமாக்கத்தக்க வழிகளைத் தேடிக்கொடுப்பதுமே தாசிகளின் தாய்க்கிழவிகளுக்குத் தொழில். வேசிகளுக்கு ஒருவனிடத்திலு மிக்கஆசை இருக்கக்கூடாது. ஒருவேளை அப்படியிருந்தபோதிலும் தாயாயிருப்பவளுடைய கட்டளையை மீறுவது நியாயமன்று. இப்படியெல்லாம் பிரமதேவன் எமக்குக் குலதருமம் மேற்படுத்தியிருக்க, அதைக்கடந்து அழகே பொருளாகக்கொண்ட ஒரு பிராமணனோடு தன் கைப்பொருளைச் செலவழித்துக்கொண்டு ஒருமாதகாலம் கழித்துவிட்டாள். அதை நான் தடுக்க முயன்றது கண்டு என்மேற் கோபமுண்டு வனவாஸம்போவதாய் ஓடிவந்தாள். இவள் மனந்திரும்பாமல் இப்படியேயிருப்பளாயின் நாங்களனைவரும் பிழைப்பில்லாமல் உமது பாதாரவிந்தத்திலேயே உயிரை இழக்கவேண்டுவதேயொழிய வேறில்லையென்றாள். அதைச் செவிசாற்றி அம்முனிவர், பெண்ணே! வனவாஸமென்பதென்ன பாலுஞ்சோறுண்வதா நினைக்கிறையோ? அதை நன்றாய் நிறைவேற்றியவர்கள் ஒருவருமில்லை. அவ்வனவாஸத்திற்குப்பயன் இரண்டு. முதலாவது மோக்ஷம்; அது அறிவிற்சிறந்த பெரியோர்களுக்கொழிய மற்றெவர்க்கும் எட்டாது. இரண்டாவதோ சொர்க்கம்; அது தங்குலாசாரத்தைத் தவறாமல் நடத்தினால் சுலபமாய்க் கைகூடும். ஆதலால் இந்த நினைப்பைவிட்டுத் தாய்சொல்வதுபோல நடந்துவா; ‘தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை’ என்பதை நீ அறிந்திலையா? என்றார். அவள், அவையொன்றையுங்கேளாமல் எனக்கு உமதடிகள் அடைக்கலமாகாதாயின் அக்கினிதான் அடைக்கலமென்று ஓரேபிடியாய்ப் பிடித்தாள். அதுகண்டு அத்தபோதனர் தாய்க்கி

மூனியைப்பார்த்து அம்மா! இப்போது இவள்மனம் திரும்புவதாய்த் தோற்றவில்லை. நீயே திரும்பக்கடவை; நாளளவில் இவள் தானும் வனவாஸத்திலுள்ள வருத்தங்களை அனுபவித்து நான் செய்யும் போதனைகளையும் அடிக்கடி கேட்டு மனஞ்சோர்ந்து திரும்பத் தலைப்படுவளென்று சொல்ல, அதற்கு அனைவரும் சம்மதித்து இல்லம் போய்ச் சேர்ந்தனர்.

அன்றுமுதல் அவ்வணங்கு அம்முனிவர் மனமுகக்கும்படி அவர்க்குச் சகல சிச்சிருஷைகளுஞ்செய்வதும், நாளுக்குநாள் மேனியுண்டாகும்படி தன்தேஹத்திற்கு அழகுசெய்வதும், அங்குள்ள செடிகளைப் பாத்திகட்டுவது முதலாய்ப் பரிபாலிப்பதும், அந்தந்தக் காலங்களில் தேவதார்ச்சனைகளைத் தவறாது நடத்துவதும் விநோதமாய்ப் பல கதைகள் சொல்வதும் சில வேளைகளில் வேதாந்தவிசாரஞ்செய்வதுமாயிருந்து சிலதினங்களிலேயே அவர்க்குத் தன்னிடத்தில் மிகுந்த அபிலாஷையுண்டாகச்செய்தனள். இப்படியாக அவர் தன்னிடத்தில் ஆசைபற்றியிருப்பதுகண்டு ஒருநாள் ஏகாந்தத்தில் இருவருமாயிருக்கையில் அவ்வேசி, ஸ்வாமி! இவ்வுலகத்தினறியாமையை என்னவென்றியம்பலாம். பொருளின்பங்களுடன் தருமத்தையும் சேர்த்துக் கணக்கிட்டிருக்கின்றதல்லவா இவ்வுலகம்? என்று கொஞ்சம் புன்னகையுடன் நவின்றாள். அதற்கு அவர் அப்படியா, பொருளின்பங்களைவிட அறஞ்சிறந்ததோ, ஆயின் அதெப்படி? இயம்புவாயென; அவள் மிக்கவெட்கங்கொண்டவள்போல் உடல் நடுங்கிநின்று மெலிந்தகுரலாய், மகாயோகிகளும் இந்த ஜந்துவைக் கேட்டா புருஷார்த்தங்களின் தாரதரத்தையுணரவேண்டும். ஆயினும் இதுவும் அடியாளுக்கு ஓர் அனுக்கிரகமாகலாம்; சொல்லுகிறேன் செவிசாற்றவேண்டும். அர்த்தகாமங்கள் தருமமில்லாமலுண்டாகுமோ? தருமமோ அப்படியல்ல; தானொன்றுமே மோக்ஷசுகத்திற்கு ஏதுவாகின்றது. மற்றவிரண்டும் அதைக்கெடுக்கவந்தாலும் தான் அதற்குட்பட்டுத் தன்வலி குறைகிறதில்லை. மெய்யறிவுண்டாகி தருமம் வேரூன்றிப்போமாயின் மற்றவை அதை அசைக்கமாட்டா; அப்படியன்றிக் கொஞ்சநஞ்சஞ் சலித்தாலும் மறுபடி அதை உறுதிப்படுத்துவது வெகு எளிது. பிரமதேவர் வியாசர் பராசரர்முதலிய பிரமரிஷிகளெல்லாம் காமத்தாலிழுக்குண்டபோதிலும் தங்கள் தருமத்திற்கு யாதொரு தீங்குமடையவில்லையென்பது யாவருமறிந்ததுதானே. ஆகாயத்திலழுக்கொட்டுமோ? அதுபோலத் தருமத்தால் பரிசுத்தமான மனதில் பாபம் படிகிறதில்லை. ஆதலால் மற்றவிரண்டும் தருமத்தின் நூற்றிலொருபங்கு விலைகூடத் தாளமாட்டாவென்று நினைக்கிறேனென்றாள். இவ்வளவும் கேட்கவே அம்முனிவர் ஆசைபொங்கி, என்கண்ணே! உன் ஆலோசனைக்கென்னசொல்லுவேன்! தத்வமறிந்தவர்களுக்கு ஒருபோதும் விஷயசம்பந்தத்தால் தீங்குநேரிடாது. நாம் பிறந்ததுமுதல் பொரு

ளின்பங்களித்தன்மையனவென்று ஒருபோதுமறியோம். அவைகள் இப்படிப்பட்டனவென்றும் அவைகளுக்குக் காரணங்கள் இன்னவென்றும், பயனின்னதென்றும் அறியவேண்டுமென்றார். அதற்கு அவளுரைத்ததாவது: நாம் தேடிக் காப்பாற்றிய செல்வமே பொருளாம்; அதற்கு வியவசாயத்தொழில், மாடுகளைக் காத்தல், வர்த்தகஞ்செய்தல் முதலியவைகளே காரணங்களாம்; ஸத்பாத்திரதானம் பயன்; என்றிப்படி எல்லாவற்றையும் விவரமாய் அறிவித்தாள். இவைகளையெல்லாம் கேட்கவே அத்தபோதனர், தெய்வபலத்தாலோ, அப்பெண்வல்லமையாலோ தமக்கு விவேகமின்மையாலோ, தன் நியமங்களனைத்துமொழிந்து அவளே நினைவாயிருந்தார். அவளும் அம்முனிவர் தனக்குக் கைவசமாகவே அவரை வெகுதூரம் ஆசைகாட்டி அழைத்துவந்து தன் நகரவீதிவழியாய் வீடுகொண்டு சேர்த்தாள். உடனே மறுநாள் உதயத்தில் காமோத்ஸ்தவம் நடக்கப் போகிறதென்று பிரசித்தஞ்செய்தனர். அப்படியே அந்நாளுதயம் அம்முனிவர் தன் நியமசிந்தையேயில்லாமல் ஒருநிமிஷமும் அவள் பிரிவையாற்றமாட்டாமல் அவள்வலையில் சிக்கிக்கொண்டு சர்வாலங்காரபூஷிதராய் அவள் கட்டளைப்படி ஓர் உத்தியானவனத்தில் வந்துசேர்ந்தார். அங்கே பல பெண்களோடு அப்பட்டணத்து அரசன் முன்னமே வந்துநின்றனன். அவ்வரசன் காமமஞ்சரியைப்பார்த்து நீ அத்தாபசர்பக்கலில் உட்காரலாமெனக் கட்டளையிட, அவளும் புன்னகைசெய்து உட்கார்ந்தாள். அப்போது அச்சபையிலிருந்து ஒருவள் எழுந்து அரசனைநோக்கி ஓ: மகாராஜனே! இப்போது நானிவளால்வெல்லப்பட்டேன். இன்றுமுதல் நான் இவளுக்குத் தாதியாய்விடுகிறேன் என்று கைகூப்பிச்சொன்னாள். அதுகேட்டு அனைவரும் வியந்தார்கள். அரசனுமாச்சரியப்பட்டுக் காமமஞ்சரிக்குப் பல வெகுமதிகள்செய்தான். அவளும் தன் காரியம் கைகூடவே, ஸ்வாமி! அடியாள் தேவரீரிடத்தினின்றும் பூரணமாய் அனுக்கிரகம்பெற்றேன்; செலவுகொடுக்கவேண்டுமென்று அம்முனிவரை வேண்டினாள். அதைக்கேட்கவே அவர் இடியிடித்ததுபோல் திகில்வீழ்ந்து, கண்ணே! உனக்கு முன் என்மேலிருந்த ஆதரவுக்கு அழிவுவந்ததற்குக் காரணமேதென்ன, அவள் ஸ்வாமி! இப்போது இச்சபையில் தோல்வியடைந்தவளெவளோ, அவள் ஒருகால் என்னை நீ மரீசிமாரிஷியை வென்றவள்போலப் புகழ்ந்துகொள்ளுகிறையே என்று ஒரு சபைநடுவே தூக்கியெறிந்ததனால் உடனே

தாதியாய்ப் போவதையே பந்தயமாக்கி இக்காரியத்திற்கு முயன்றேன். உமது கடாக்ஷத்தால் வெற்றிபெற்றேன் என்று சொல்லிப் போயினள். அம்முனிவரும் தான் விவேகமற்றியற்றிய தீச்செயலுக்கு மனம்வெறுத்துத் திரும்பி இருப்பிடம்வந்து சேர்ந்தார். அப்பாடுபட்டவன்தான் நானென்றறி. உன்காரியமும் துரிதத்திலே கைகூடும், இந்த நகரத்திலேயே கொஞ்சநாளெதிர்பார்த்திரு என்றருளிச்செய்தார்.


அப்போது அம்முனிவர் மனதைவிட்டு நீங்கின அறியாமை தன்னிடம் வரப்போகிறதென்று பயந்தவன்போல் இரவியும் அஸ்தமித்தான். அக்கதையைக் கேட்டு வைராக்கியமுற்றனபோல் தாரகைகளெல்லாம் மவுனமாய்நின்றன. நான் அன்றிரவை அங்கு நீத்து உதயகாலையிலெழுந்து முனிவரிடம் விடைபெற்று நகரம்நோக்கிச் சென்றேன். அப்பட்டணத்தருகில் ஒரு தோட்டத்தில் முனிவன்போல் ஒருவன் உட்கார்ந்து கண்ணுங்கண்ணீருமாயிருக்கக் கண்டு தவமியற்றுவோர்க்கு அழுகையேனென, அவன் சொன்னதாவது: எனக்கு வசுபாலிதனென்று பேர்; நான் நிதிபாலிதனென்னும் ஒரு வர்த்தகன் மகன், நான் அழகிற்சிறந்தவனாயிராமைபற்றி எனக்கு விரூபகனென்றே பேர் பிரசித்தமாயிற்று. மற்றொருவன் கல்வியிலும் அழகிலுமே மேன்மைபெற்றுப் பொருளிற்சிறுவனாய் சுந்தரகனெனப்பேர்கொண்டிருந்தான். கலகமே பிழைப்பாயுள்ள அப்பட்டணத்துப் போக்கரிகளநேகர் அர்த்தம் பெரிதா அழகு பெரிதா என்று சொல்லி எங்களிருவருக்கும் போட்டியுண்டாக்கினர். ஒருகால் ஒரு திருவிழாவில் முன்சொன்னதைவிட்டு, பெண்களிற் சிறந்தவள் எவனை விரும்புகின்றனளோ, அவரே ஆண்பிள்ளையெனக் கலகமூட்டினர். அதற்கு நாங்களிருவருமிசைந்து அதற்காகக் காமமஞ்சரியென்னும் பெண்மணியை அழைத்துவரும்படி கட்டளையிட, அவள் வந்து என்னையே விரும்பினாள். அன்றுமுதல் யான் அனைத்தையும் அவள் வசம்செய்து அவளண்டை வாழ்ந்திருந்தேன். கொஞ்சநாளில் அரைத்துணியையும் உரித்துகொண்டு துரத்திவிட்டாள். அதன்பிறகு அப்பட்டணத்து இழிவுச்சொற்களைக்கேட்க மாட்டாமல் இவ்விடம்வந்துசேர்ந்து பாஷண்டிவேஷம் பூண்டிருக்கிறேன். என் முன்னோர்களெல்லாம் தத்தம்வர்ணாச்சிரம தருமங்களைத் தவறாது நடத்திவந்தார்கள். நான் இருபிறப்பாளர்களிலொருவனாயிருந்தும் இவ்விதி எனக்கு நேரிட்டதேயென்று தன்னடத்

தைகளனைத்தும் ஒளியாமலுரைத்தான். நானும், நீ கொஞ்சகாலம் பொறுத்திரு, உன்னிஷ்டத்தைக் கைகூட்டுவேனென்று தைரியமுரைத்து நகரத்திற்குள் நுழைந்தேன். பட்டணத்திற் பிரவேசிக்கும்போதே அப்புரத்திலுள்ளோர் அனைவரும் லோபிகளென்று கேள்வியுற்று, பொருளங்கே மின்னிலையொத்ததென்று அறிவித்து அவர்களைத் தத்தநிலையினிறுத்தவேண்டுமென்று கருதி வீதிவழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில், ஓரிடத்தில் அநேகர் கூட்டங்கூடிச் சூதாடுவதுகண்டு அங்கேபோய்ச்சேர்ந்து நானுமோராட்டக்காரனாயினேன். எனக்குத் தெரிந்த பல சூதாடுசாஸ்திரங்களையும் அதிலுபயோகித்து மத்தியஸ்தர்களனைவர்க்கும் நியாயந்தோன்றும்படி யுக்திகளெடுத்துக்காட்டி, இளைத்தவர்களை வெருட்டியும் வலியோர்களை வணங்கியும் இப்படி பல உபாயங்கள்செய்து ஜயம்பெற்றுப் பதினாறுயிரம் பொன் சம்பாதித்து அதிற் பாதியை அச்சபையிலிருந்த மத்தியஸ்தர்களுக்குத் தானஞ்செய்து மிகுதியை நானடைந்தேன். அங்கிருந்தவர்களனைவரும் என் வல்லமையை வியந்து அன்றையதினம் எனக்கு அங்கேயே விருந்துசெய்வித்தார்கள். முதலில் என்னை அந்த ஆட்டத்திற்கொண்டுவிட்டுப் பொருள்கிடைக்கும்படி செய்தவனொருவன் எனக்கு உயிர்த்தோழனாயினான். அவனிடத்தினின்றும் அந்நகரவிருத்தாந்தங்கள் அனைத்தும் நுட்பமாயறிந்துகொண்டு அவனோடுகூடியிருந்தேன். (இன்னும் வரும்.)

## சமாசாரம்.

**இளவரசரின் நல்வரவு.**—நமது யுவராஜாவாகிய பிரின்ஸப்வேல்ஸ் அவர்கள் கொழும்பிலிருந்து தூத்துக்குடி, மதுரை, திரிசிரபுரம் முதலான இடங்களைப் பார்த்துக்கொண்டு இருப்புப்பாதைவழியாய் டிசெம்பர்மீ 13உ திங்கட்கிழமை இச்சென்னைமாநகருக்கு விஜயம்செய்வதாக நிச்சயசமாசாரம் வந்திருக்கிறது. இந்நகரில் சாலைகளிலும் வீதிகளிலும் பூப்பந்தல்கள், விளக்குக்கூண்டுகள், மகரதோரணங்கள் முதலான எண்ணிறந்த அலங்காரங்கள் விதம்விதமாய்ச் செய்துவருகிறார்கள். நாட்டிலுள்ள சுதேசராஜாக்கள்தொடர்ச்சியாய் பரிஜனஸகிதமாக வந்துக்கொண்டிருக்கின்றனர். எங்கேபார்த்தாலும் ஆரவாரமாயிருக்கிறது. இந்த யுவராஜாவின் உச்சவம் சிறப்பாய் நடக்குமென்று யாவரும் எதிர்பார்த்திருக்கிறார்கள். இம்மாட்சிமையான காட்சியின் விவரங்கள் வருகிறமாதச் சஞ்சிகையில் தெரிவிப்போம்.

Printed at the C. K. S. Press.




GIBRALTAR.

ஜிப்ரால்டர்.